செ.வெ.எண் 116 நாள் 28.04.2016

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் பணிகளை கண்காணிக்க பொது பார்வையாளர்கள் வருகை

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு வருகின்ற மே மாதம் 16ஆம் நாள் நடைபெற உள்ளதை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பணிகள், வாக்குப் பதிவிற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசியல் கட்சிகள்/வேட்பாளர்களின் தேர்தல் செலவீனங்களை கண்காணிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்திய தேர்தல் ஆணையமானது தேர்தல் தொடர்பான அனைத்து பணிகளை கண்காணிக்க காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் இந்திய ஆட்சிப் பணி (I.A.S) நிலையிலான உயர் அலுவலர்களை தேர்தல் பொது பார்வையாளராக (General Observer) நியமனம் செய்துள்ளது. இத்தேர்தல் பொது பார்வையாளர்கள் இன்று (28.04.2016) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ள பொது பார்வையாளர்கள் மற்றும் தொடர்பு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் தொடர்பான புகார்கள் ஏதேனும் இருப்பின், அது குறித்து சம்மந்தப்பட்ட தேர்தல் பொது பார்வையாளரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திருமதி. இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

| சட்டமன்றத் தொகுதி | தேர்தல் பொது பார்வையாளரின் பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|
| 27.சோழிங்கநல்லூர்<br>28. ஆலந்தூர் | திரு. கே.நரசிம்ஹா, இ.ஆ.ப. | 7397028838 |
| 29.திருப்பெரும்புதூர் (தனி)<br>30. பல்லாவரம் | திரு. கே.லால் தௌமாவ்யா, இ.ஆ.ப. | 7397028839 |
| 31. தாம்பரம்<br>32. செங்கற்பட்டு | திரு. அபா கான்ஷி, இ.ஆ.ப. | 7397028840 |
| 33. திருப்போரூர்<br>34. செய்யூர் (தனி) | திரு. அரூப் குமார் சாகா, இ.ஆ.ப. | 7397028841 |
| 35. மதுராந்தகம் (தனி)<br>36. உத்திரமேரூர் | திரு. பிரிஜ் ராஜ் ராய், இ.ஆ.ப. | 7397028842 |
| 37. காஞ்சிபுரம் | திருமதி. சோமா பட்டாச்சார்ஜீ, இ.ஆ.ப. | 7397028845 |

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.